காலை முரசு

பக்கங்கள் 21

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 10 திங்கட்கிழமை 26.08.2024 | அதிர்வு 024

## தெதுரு ஓயாவில் மூழ்கிய தாயும் இரு பிள்ளைகளும்

### ஒருவர் சடலமாக மீட்பு

குருநாகல் – தெதுரு ஓயாவில் நேற்றுப் பகல் நீராடச் சென்ற தாயும் இரண்டு பிள்ளைகளும் நீரில் மூழ்கினர்.

பெரகஹவத்த பிரதேசத்தைச் 05



### மக்களுக்குப் பொய் சொல்வதை நிறுத்திவிட்டு

# சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலுக்கு வாருங்கள்

### சஜித், அநுரவுக்கு ரணில் சவால்



“சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸா நாயக்கவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்த னைகளை மாற்றியமைப்பதாகத் தெரிவிப்பது மக்களை ஏமாற்றும் செயலாகும். அதனால் இனியும் மக்க ளுக்குப் பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணைய வழி முறையில் பகிரங்க கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு, சஜித் மற்றும் அநுரகுமார ஆகியோருக்குச் சவால் விடுகின்றேன். இதன் மூலம் அவர்கள் மேடை களில் சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மை மையை முழு நாட்டு மக்களும் கண்டுகொள்ள முடி யும்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் 05

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!



களுத்துறை – இத்தேபான பகுதியில் உள்ள நீரோடையில் நேற்றுப் பிற்பகல் நீராடச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

மொரட்டுவை சுகாதார 05




கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட அதே நெருக்கடி இம்முறை தமிழரசுக் கட்சிக்கும் நேரும் என்றே தோன்றுகின்றது.

போன ஜனாதிபதி தேர்தலின் போது சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை கடைசி கட்டத்தில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தது. அதுவரை இழுத்தடித்தது.

அதனால் தபால் மூல வாக்களிப்பில் பங்குபற்றிய அரச ஊழியர்களுக்கு வாக்களிப்புத் தொடர்பில் தனது நிலைப்பாட்டை தமிழ்க் கூட்டமைப்பினால் அப்போது வழங்க முடியவில்லை.

இப்போதும் – இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் – தபால் மூல வாக்களிப்பு பெரும்பாலும் வரும் 4,5,6 ஆம் திகதிகளில் முதல் கட்டமாக நடைபெறப் 05

# கனடா தமிழர் தெருவிழாவில் அடாவடித்தனம், அட்டகாசம்!

## தமிழ் one tv வாகனம் எரியூட்டப்பட்டது

கனடாவின் பிரதான தமிழ் ஊடகங்களில் ஒன்றான தமிழ் one tv நேற்றுத் தாக்கப்பட்டிருக்கின்றது.

SV media குழுமத்தின் தமிழ் தொலைக்காட்சியான தமிழ் ழநெ தொலைக்காட்சியின் ஒளிபரப்பு வாகனம் இனம் தெரியாத நபர்களினால் நேற்றுக் காலை எரியூட்டப்பட்டுள்ளது.

கனடாவின் பிரதான தமிழ் மக்களின் விழாவான Tamil Fest எனும் தமிழர் தெருவிழாவுக்கான எதிர்ப்பின் வெளிப்பாடாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக தெரிவருவதாவது:-

கனடியத் தமிழர் பேரவை வருடந்தோறும் தமிழர் தெருவிழா எனும் நிகழ்வினை நடத்திவருகின்றது. பத்தாவது வருடமாக இந்த மாதம் 24,25 திகதிகளில் (சனியும் ஞாயிறும்) இந்த விழா நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

கனடாவில் அதிக அளவில் தமிழ் மக்கள் ஒன்றுகூடுகின்ற நிகழ்வு இதுவாகும்.

இந்த வருடம் கனடிய தமிழர் பேரவையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் மக்கள் இந்த விழாவைப் புறக்கணிக்க வேண்டும் என கனடாவில் உள்ள சில தமிழ் அமைப்புகளும் ,சில செயற்பாட்டாளர்களும் கனடாத் தமிழ் மக்களைக் கோரியிருந்தனர். அத்துடன் இந்த நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்ககூடாது என வர்த்தகர்களிடமும் கோரிக்கை அழுத்தமாக முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்சிக்கு அனுசரணை வழங்கி இருந்த பிரதான அனுசரணையாளர்கள் நிகழ்சிக்கு முதல் நாள் தமது அனுசரணையை விலக்கிக்கொண்டிருந்த நிலையில் தமிழ் one தொலைக்காட்சியின் பிரதான நிறுவனமான SV Media விடமும் இந்த நிகழ்ச்சியின் மேடை,ஒளி,ஒலி தயாரிப்புப் பணிகளில் இருந்து விலகிக்கொள்ளுமாறு கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனினும் தாம் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து

தொடர்ச்சி▼






# கனடா தமிழர் தெருவிழாவில் அடாவடித்தனம், அட்டகாசம்!

## தமிழ் one tv வாகனம் எரியூட்டப்பட்டது

தொடர்ச்சி▲

பொறுப்பேற்ற சேவையில் இருந்து தாம் விலக முடியாது என ளுஏ ஆநனயை வின் சார்பில் தெரிவிக்கப்பட்டதுடன் நிகழ்ச்சிக்கான தயாரிப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

புறக்கணிக்க கோரி கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட நிலையில் – பல கலைஞர்கள், வர்த்தகர்கள் விலகி கொண்ட சூழ்நிலையில் – பொதுமக்கள் நிகழ்ச்சியில் பங்கு கொள்ளமாட்டார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

நிகழ்வுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் கொடிகளோடு வீதிகளில் தீவிர பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதுடன், நிகழ்ச்சி நடைபெறும் வீதிகளின் தொடக்கத்தில் இருந்தும் போராட்டம் செய்யப்பட்டது.

எனினும் எதிர்ப்புகளை மீறி சனிக்கிழமையன்று நிகழ்ச்சி நடைபெற்றமையுடன் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இடையில் தென்னிந்தியப் பின்னணிப் பாடகர் ஸ்ரீனிவாஸ் பாடிகொண்டிருந்த போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தரப்பில் இருந்து மேடை மீது முட்டை வீசப்பட்டது. இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் நிகழ்ச்சி இடை நிறுத்தபட்டது.

இதன் ஒரு தாக்கமாக ளுஏ ஆநனயை வின் தொலைகாட்சியான தமிழ் ழநெ வஎ யின் ஒளிபரப்பு வாகனம் பெறுமதி மிக்க ஒளிபரப்புக் கருவிகளுடன் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
















# காதுகளால் வாகனம் இழுத்து சாதனை!

தென்மராட்சியின் சாதனை நாயகன் செல்லையா திருச்செல்வம், 1500 கிலோகிராம் எடையுள்ள ஹயஸ் வாகனத்தை 100 மீட்டர் தூரம் தனது இரு காதுகளால் கட்டி இழுத்து சாதனை படைத்துள்ளார்.

யாழ்.கொடிகாமம், நட்சத்திர மஹால் முன்றிலில் ஏ9 வீதியில் நேற்றுக் காலை இந்தச் சாதனை நிகழ்வு இடம்பெற்றது.

வாகனத்தை வெற்றிகரமாக காதுகளால் இழுத்து சாதனை புரிந்த செல்லையா திருச்செல்வம் இதன்போது கௌரவிக்கப்பட்டார்.

இதேவேளை, தமிழ்நாடு, கொழும்பு, யாழ்ப்பாணம் என முன்னர் பல தடைகள் செல்லையா திருச்செல்வம், தனது தாடியால் பல்வேறு வாகனங்களை இழுத்து சாதனை புரிந்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போகின்றது.

அதற்கு முன்னர் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை தமிழரசுக் கட்சி எடுப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

மாகாண சபை தேர்தல்களை பழைய சட்டத்தின் பிரகாரம் நடத்துவதற்கு வழி செய்யும் சட்டமூலம் வரும் 3 ஆம் திகதி மூன்றாவது வாசிப்புக்கு நாடாளுமன்றத்திற்கு வருகிறது.

மூன்றாவது வாசிப்பு என்பதால் இந்தச் சட்டமூலத்தின் மீது அன்று விவாதம் நடக்காது. அதை நிறைவேற்றுவது மட்டும்தான் வேலை. அதுவும் கூட யாரும் வாக்கெடுப்புக்குக் கோரினால் மட்டுமே வாக்கெடுப்புக்கு அது விடப்படும். இல்லையேல் வாக்கெடுப்பின்றியே அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதாக நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டு விடும்.

அப்படி அந்தச் சட்ட மூலம் உத்தியோகபூர்வமாக நிறைவேறும் வரை இந்தத் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை தமிழரசுக் கட்சி எடுக்காது என்று கட்சியின் உள்வீட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

3ஆம் திகதி அந்தச் சட்டமூலம் தொடர்பான விடயம் நாடாளுமன்றத்தில் முடிந்த பின்னர், தமிழரசு கட்சி கூடி 4,5,6 ஆம் திகதிகளில் நடைபெறும் தபால் மூல வாக்களிப்பு தினத்துக்கு முன்னர் தனது முடிவை அறிவிக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

\+ + +

'பார்' போற்றும் பெர்மிட்டுக்கள் வழங்கல், அணி மாற்றங்களுக்கான பணம் கைமாறுதல் ஆகிய ஆகியவை பற்றிய தகவல்களை எல்லாம் சூசகமாக - அதிரடியாக - அவ்வப்போது வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்துபவர் தயாசிறி ஜயசேகரா.

அவரின் கூற்றுப்படி இரத்தினபுரிப் பகுதி அம்மணி அரசு பக்கம் பாய்வதற்கு முன்னர் காலையில் சிங்கப்பூர் சென்று மாலையில் திரும்பி இருக்கின்றார். டீல் தொகை சிங்கப்பூரில் கைமாறி இருக்கின்றது என்கிறார் தயாசிறி.

நுவரெலியா எம்.பி. ஒருவரும், தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவரும் அணி மாறுவதற்கு முன்னர் தாய்லாந்து சென்று வந்தனராம். அங்கு டீல் இணக்கமாக முடிக்கப்பட்டதாகக் கேள்வி.

தென்னிலங்கை எம்.பிமார் வெளிநாட்டில் டீல் முடிக்க, நம்மவர்கள் மட்டும்தான் உள்நாட்டில் 'சின்ன டீலாக' முடித்துக் கொள்கின்றார்கள் போலும்.

## தெதுரு ஓயாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சேர்ந்த 36 வயதுடைய தாய் மற்றும் அவரது 9 மற்றும் 5 வயதுடைய இரண்டு மகன்களுமே இவ்வாறு நீரில் மூழ்கினர்.

அவர்களில் 9 வயது சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. தாயும் மற்றொரு மகனும் காணாமல்போன நிலையில் தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை போகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொதுச் சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.கௌதம் (வயது 26), மட்டக்களப்பைச் சேர்ந்த எஸ்.ஹர்ஷநாத் (வயது 28) ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

சடலங்கள் மீதான பிரேத பரிசோதனை இன்று நடைபெறவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இத்தேபனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச நாணய நிதியத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06 ▶







## சர்வதேச நாணய நிதியத்துடன்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“நாடு வீழ்ச்சியடைந்திருந்தபோது யாரும் முன்வராத காரணத்தினாலே நான் முன்வந்தேன். இலங்கை இல்லாமல் போனால் ஐக்கிய தேசியக் கட்சியும் இல்லாமல் போகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை நிர்மாணித்த டீ.எஸ். சேனாநாயக்க எமக்குக் கற்றுத் தந்த விடயங்களின் அடிப்படையிலேயே நான் நாடு இல்லாமல்போகும் நிலையில் நாட்டைப் பாதுகாத்து கட்சியைப் பாதுகாக்க முன்வந்தேன். இந்த விடயங்கள் எம்மில் இருந்து சென்றவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குக் கட்சியின் வரலாறு தெரியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்க தேர்தலாகும். இதில் நான் வெற்றி பெற வேண்டுமா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். நான் வெற்றி பெற வேண்டும் என்றால். வீடு வீடாகச் சென்று மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்த ஆரம்பிக்க வேண்டும். அன்று நாடு வீழ்ச்சியடையும்போது பலரும் எம்முடன் இணைந்துகொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப முன்வந்தனர். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் நாட்டுக்கு அநீதி செய்தன. அவர்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவே முயற்சித்தனர்.

ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வந்தபோதும் நானே அவரைப் பாதுகாத்தேன். அதே போன்று அவர் கொலை செய்யப்பட்டபோதும் நானே அந்த இடத்துக்கு ஆரம்பமாகச் சென்றேன். இதனை அவர்கள் மறந்துள்ளார்கள். அவர்கள் ஓடியதாலே நான் பொறுப்பேற்றேன். நாங்கள் ஒரு அணியாகச் செயற்பட்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தோம். இந்த அணியே உலக நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துரையாடி உதவிகளைப் பெற்றுக்கொண்டு இந்த நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்தோம்.

அதிகாரத்துக்கு வந்தால் வரியைக் குறைப்பதாகச் சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸாநாயக்கவும் தெரிவிக்கின்றனர். அவர்கள் இதனை எவ்வாறு செய்யப் போகின்றார்கள் என்பதை முதலில் தெரிவிக்க வேண்டும். வரியைக் குறைத்ததாலே நாடு வீழ்ச்சியடைந்தது என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

அதனால் இரவில் வீழ்ந்த குழியில் பகலில் விழ வேண்டுமா எனக் கேட்கின்றேன். நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்துவதாகத் தெரிவிக்கின்றனர். இரண்டு தரப்பினருடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை இலகுவில் மாற்ற முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால் 18 நாடுகளுடன் 3 அமைப்புகளுடன் கலந்துரையாட வேண்டும். நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள எங்களுக்கு ஒரு வருட காலம் சென்றது.

மேலும், நாணய நிதியத்தின் அதிகாரிகள் அடுத்த வருடம் ஆரம்பத்தில் இலங்கை வர இருக்கின்றனர். எமது முன்னேற்ற நடவடிக்கை தொடர்பில் இதன்போது அவர்கள் ஆராய்வார்கள். நாங்கள் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால் தொடர்ந்து நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் முன்னுக்குச் செல்லத் தயார் எனத் தெரிவிப்போம்.

ஆனால், சஜித், அநுர என்ன சொல்லப் போகின்றார்கள்? நிபந்தனைகளைத் திருத்தியமைப்பதாக இருந்தால் ஒரு மாதம் காலம் செல்லும். தற்போது நாணய நிதியம் எமக்கு வழங்கி இருக்கும் நிதி ஜனவரி வரைக்கும் போதும். அதன் பின்னர் நிபந்தனைகளை மாற்றியமைக்கும் வரை நாணய நிதியத்தின் 700 பில்லியன் டொலர் நிறுத்தப்படும். அப்படியானால் நாட்டைக் கொண்டு செல்ல இவர்கள் பணத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளப் போகின்றார்கள்.?

அதனால் அவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றியமைப்பதாகத் தெரிவிப்பது மக்களை ஏமாற்றும் செயலாகும். அதனால் இனியும் மக்களுக்குப் பொய் சொல்வதை நிறுத்திவிட்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் இணைய வழி முறையில் பகிரங்க கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு, சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்குச் சவால் விடுகின்றேன். இதன் மூலம் அவர்கள் மேடைகளில் சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மையை முழு நாட்டு மக்களும் கண்டு கொள்ள முடியும்.” – என்றார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலுக்குச் சான்றிதழ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சிக்கான 'நற்சான்றுப் பத்திரம்'

சர்வதேச மட்டத்தில் கிடைத்திருக்கின்றது இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஆறு மாதம் முதல் அடுத்த ஒன்றரை ஆண்டு காலத்தில் மாத்திரம் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட 3,000 குற்றச்சாட்டுக்களை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு பதிவு செய்துள்ளது என்று அந்த நற்சான்றுப் பத்திரத்தில் ரணில் ஆட்சிப் பீடத்தின் சாதனை பொறிக்கப்பட்டிருக்கின்றது.

தொடரும் துஷ்பிரயோகங்கள் குறித்த இந்த அதிர்ச்சியளிக்கும் விவரங்கள் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆணையாளரின் இலங்கை தொடர்பான சமீபத்தைய விரிவான அறிக்கையில் வெளியாகியுள்ளன.

"பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுவது இலங்கையில் தொடர்ந்து இடம்பெறுகிறது" என செப்டெம்பர் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடரை ஒட்டி இலங்கை தொடர்பாக ஆணையாளர் முன்வைத்த அவதான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் வோகர் டர்க் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், "நாட்டில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அனுபவிப்பதில் தொலைநோக்கு பார்வையில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சில கவலையான போக்குள் காணப்படுகின்றன" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் வடக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தமக்கு அளித்த தகவல்களின் அடிப்படையில் இவை கண்டறியப்பட்டுள்ளன என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதர் அலுவலகத்தின் அந்த அறிக்கை கூறுகிறது.

"கடந்த ஜனவரி 2023 முதல் மார்ச் 2024 வரையிலான காலப்பகுதியில் சித்திரவதை குறித்த 2,845 முறைப்பாடுகளும், இழிவாக நடத்தப்படுவது குறித்து 675 குற்றச்சாட்டுகளும் தமக்குக் கிடைத்தன என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியது" என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனவரி 2023 மற்றும் மார்ச் 2024க்கு இடையில், சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்பான 21 வழக்குகள், தடுப்புக் காவலிலிருந்த போது 26 பேர் உயிரிழந்த வழக்குகள் மற்றும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைக்கப்பட்டது தொடர்பாக 1,342 முறைப்பாடுகளும் தமக்கு கிடைத்தன என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரச தடுப்புக் காவலில் 2023இல் 14 பேரும் 2024இல் மூவரும் உயிரிழந்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

"அண்மையில் பிரதானமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில், இலங்கை பாதுகாப்பு படையினரால் தமிழர்கள் கடத்தப்படுவது, சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்படுவது, மோசமாக நடத்தப்படுவது மற்றும் பாலியல் வன்செயல்களுக்கு ஆளாக்கப்படுவது ஆகிய அண்மைய குற்றச்சாட்டுகளை ஆராய்ந்தோம். இவை ஜனவரி 2024 முதல் கிடைத்தவை" என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறுகிறது.

அரசியல் எதிரிகள், நியாயத்திற்காகப் போராடுபவர்கள் மற்றும் சந்தேகத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோரே பிரதான இலக்காக இருந்துள்ளனர் என்பதை பலதரப்பிலிருந்து உறுதியாகியுள்ளதைக் காட்டும் 'தெளிவான ஒரு பாணி வெளியா-கியுள்ளது' என அந்த அறிக்கை கூறுகிறது.

"தமிழர்கள் - பிரதானமாகக் காணாமல் போனோர், காணி மற்றும் சுற்றுச்சூழல் உரிமைகள் அல்லது போரில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவேந்தல் தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என நம்பப்பட்டவர்கள் கண்காணிக்கப்பட்டனர் அல்லது புகைப்படம் எடுக்கப்பட்டனர், பின்னர் பொலிஸின் குற்றத் தடுப்பு பிரிவினர் அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என தங்களை வாய்மொழியாக அடையாளப்படுத்திக் கொண்டவர்களால் கைது செய்யப்பட்டார்கள்" - என அந்த அறிக்கை விவரிக்கின்றது

அந்த வகையில், கண்கள் கட்டப்பட்டு அடையாளம் தெரியாத இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர்கள் மூன்று தொடக்கம் ஐந்து நாள்கள் வரை விசாரிக்கப்பட்டனர் எனவும், பாதுகாப்பு படையினர் சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவான முறையில் நடத்தப்படுவதற்கு பல்வகையான உத்திகளைக் கையாண்டனர் எனவும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"விசாரணையின் போது அல்லது தடுத்து வைக்கப்பட்டபோதோ தாங்கள் பாலியல் துஷ்பிரயோகம், விதைப்பைகளை அழுத்துவது, பலவந்தமாக நிர்வாணமாக்குவது, மார்பகங்களைக் கடிப்பது போன்ற பாலியல் சித்திரவதைகளை அனுபவித்தனர் நப் பலர் கூறினர். அதுமாத்திரமன்றி அப்படியான சித்திரவதை அனுபவிப்பதை நிறுத்துவதற்காக, தகவல்களைப் புனைந்து சொல்வது அல்லது 'ஒப்புக்கொள்வது', அல்லது அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வாசிக்க இயலாத சிங்கள மொழியில் உள்ள ஆவணங்கள் அல்லது வெற்றுத்தாள்களில் கையொப்பமிடச் செய்வது ஆகியவற்றைச் செய்யும் நிலை ஏற்பட்டது எனவும் சிலர் கூறினர்." - என்கிறது அந்த அறிக்கை.

ரணில் அரசின் முகத் திரையைக் கிழிக்கின்றது இவ்வறிக்கை.

# அரசியல் பின்புலம் இல்லாத இளைஞர்கள் அரசியலுக்கு வர ஆர்வம் காட்டுகிறார்கள்

## மனதின் குரல் உரையில் பிரதமர் பெருமிதம்



'அரசியல் பின்புலம் இல்லாத இளைஞர்கள் அரசியலுக்கு அதிக வர ஆர்வம் காட்டுகிறார்கள்."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தனது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் வானொலி மூலம் நாட்டு மக்களிடம் உரையாற்றி வருகிறார். அதன்படி, 113 ஆவது வார மனதின் குரல் நிகழ்வில் நேற்று பேசிய பிரதமர் மோடி,

"அரசியல் பின்புலம் இல்லாத ஒரு லட்சம் இளைஞர்களை அரசியலில் இணைத்துக்கொள்ளுமாறு இந்தாண்டு செங்கோட்டையில் இருந்து நான் வலியுறுத்தி இருந்தேன். எனது இந்த வேண்டுகோள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்வேறு இளைஞர்கள் அரசியலில் இணைய ஆவலுடன் இணைய காத்திருப்பதாக அறிய முடிகிறது.

அவர்கள் அனைவரும் நல்ல வாய்ப்புக்காவும் சிறந்த வழிகாட்டுதலுக்காகவும் காத்திருக்கிறார்கள். இது தொடர்பாக நாடு முழுவதிலும் இருந்து இளைஞர்களிடம் இருந்து எனக்கு கடிதம் வருகிறது. சமூக வலைதளங்களிலும் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. மக்கள் எனக்கு பல ஆலோசனைகளை வழங்குகின்றனர். பல இளைஞர்கள் தங்களின் கடிதங்களில், 'இது எங்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாத ஒன்று. தாத்தா, பெற்றோர் யாருக்கும் அரசியல் பாரம்பரியம் இல்லாத நிலையில், நாங்கள் அரசியலுக்கு வர விரும்பினாலும் முடிவதில்லை' என்று தெரிவித்துள்ளனர்.

சுதந்திர போராட்டத்தின் போது அரசியல் பின்புலம் இல்லாவிட்டாலும், அனைத்து தரப்பில் இருந்தும் மக்கள் போராட முன்வந்தனர். இந்திய சுதந்திரத்துக்காக முழுவதுமாக தங்களை அர்ப்பணித்தனர். இன்று வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற நோக்கத்தை அடைய அதே உணர்வினை நாம் கட்டி எழுப்ப வேண்டும். ஒவ்வொரு வீடும் மூவர்ணக்கொடி ஒட்டுமொத்த நாடும் மூவர்ணக்கொடி என்ற பிரச்சாரம் இந்தமுறை உச்சம் பெற்றுள்ளது. இந்தப் பிரச்சாரம் தொடர்பான அற்புதமான புகைப்படங்கள் நாட்டின் மூலைமுடுக்கில் இருந்து எல்லாம் வெளியாகின. வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மூவர்ணக்கொடி பறந்ததை நாம் பார்த்தோம்.

மக்கள் தங்களின் கடைகள், அலுவலகங்களிலும் மூவர்ணக்கொடியை ஏற்றினர். அதேபோல், தங்களின் டெக்ஸ்டாப், மொபைல்கள், வாகனங்களிலும் மூவர்ணக் கொடியை வைத்திருந்தனர். ஜம்மு காஷ்மீரில் 750 மீற்றர் நீளமுள்ள மூவர்ணக்கொடி ஊர்வலம் நடத்தப்பட்டது. உலகின் உயரமான செனாப் ரயில் பாலத்தில் இந்த ஊர்வலம் நடந்தது. அருணாச்சலப் பிரதேசத்தின் கிழக்கு கமெங் மாவட்டத்தில் 600 மீற்றர் நீளமுள்ள மூவர்ணக்கொடி ஊர்வலம் நடந்தது.

நாடு முழுவதும் இதுபோன்ற மூவர்ணக்கொடி ஊர்வலங்களில் பலர் கலந்து கொண்டனர். பெண்கள் சுயஉதவிக் குழுவினர் லட்சக்கணக்கான கொடிகளைத் தயாரித்தனர். கொடியின் மூன்று வர்ணங்கள் பூசப்பட்ட பொருள்கள் மின்வணிகம் மூலமாக அதிக அளவில் விற்பனையாகியிருக்கின்றன. சுதந்திர தின கொண்டாட்ட நாளில் நாட்டின் அனைத்து மூலைகளிலும் நிலம், நீர், ஆகாயம் என மூவர்ணக்கொடியே வியாபித்து இருந்தது." – என்றார்.

# சென்னையில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் விஜயகாந்த் சிலையை திறந்து வைத்தார் பிரேமலதா



சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில், கட்சியின் மறைந்த தலைவர் விஜயகாந்தின் சிலை திறக்கப்பட்டுள்ளது. அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சிலையை திறந்துவைத்துள்ளார்.

தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் கடந்த ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதி காலை காலமானார். நடிகராக வளர்ந்து வந்த காலத்திலேயே தனது ரசிகர் மன்றம் மூலம் மக்களுக்கான நலத் திட்டங்களில் அதிக அளவில் முனைப்புக் காட்டியவர். ஏழை மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட்ட அவர், தேவையான விஷயங்களுக்கு நிதியுதவி, நன்கொடை அளித்தல், இளைஞர்களுக்கான பல்வேறு முன்னெடுப்புகள், இலவசத் திருமணங்கள், விளையாட்டு அகாடமி என பல்வேறு துறைகளில் முத்திரை பதித்தார்.

அரசியலில் நுழைந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்தவர் விஜயகாந்த். அவரது 72 ஆவது பிறந்தநாளான நேற்று, சென்னை தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் அவரது சிலையை கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் திறந்து வைத்தார். சிலையை திறந்து வைத்த பிரேமலதா, கண் கலங்கினார். விஜயகாந்த் சிலை திறப்பு விழாவில் விஜயகாந்தின் மகன்கள், தே.மு.தி.க. நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். காலை முதலே ஏராளமான தொண்டர்கள் விஜயகாந்தின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# முதல்வர் ஸ்டாலினுடன் கமல் சந்திப்பு

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள இல்லத்தில் முதல்வர் ஸ்டாலினை, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன் சந்தித்து பேசினார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவம் பொறித்த நாணயம் வெளியிட்டு விழாவில் கலந்து கொள்ள மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அன்று அவரால் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே, நாணயத்தை வெளியிட்டதற்கு முதல்வரை சந்தித்து தனது வாழ்த்துக்களை கமல்ஹாசன் தெரிவித்தார்.

தொடர்ந்து, மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவம் பொறித்த நாணயத்தையும் முதல்வரிடமிருந்து கமல்ஹாசன் பெற்றுக்கொண்டார்.

மேலும், முதல்வர் விரைவில் செல்லவிருக்கும் அமெரிக்க பயணத்துக்கும் கமல்ஹாசன் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுச் செயலாளர் ஆ.அருணாச்சலம் உடனிருந்தார்.



# இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா பாரிய தாக்குதல் 48 மணிநேரம் நாடு தழுவிய அவசர நிலை

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா நடத்திய பாரிய அளவிலான தாக்குதலைத் தொடர்ந்து, 48 மணிநேர நாடு தழுவிய அவசர நிலையை இஸ்ரேல் பிரகடனப்படுத்தியுள்ளது.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் பாரிய தாக்குதல் இடம்பெற்று வருவதாகவும், இஸ்ரேலில் உள்ள 11 இராணுவ தளங்கள் மற்றும் 11 படைமுகாம்கள் மீது 320 இற்கும் மேற்பட்ட வான்வெளி மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் ஹிஸ்புல்லா குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் இஸ்ரேலால் தனது தலைமை இராணுவத் தளபதி ஃபுவாட் /குரைக் கொன்றதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் ஹிஸ்புல்லா கூறுகிறது.

எவ்வாறாயினும், அந்த தாக்குதல்களுக்கு பதிலடியாக, இஸ்ரேலிய தாக்குதல்கள் ஹிஸ்புல்லாவை இலக்காகக் கொண்டமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த குழு தயாராகி வருவதாகத் தெரியவந்ததை அடுத்து, தெற்கு லெபனானில் இஸ்ரேல் தீவிர வான்வழித் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாவின் மூத்த தளபதி படுகொலை செய்யப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் நேற்று முன்தினம் இஸ்ரேலுக்கு எதிராக இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவி இந்த தாக்குதலை ஹிஸ்புல்லா நடத்தியுள்ளது.

எனினும் ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக மதிப்பிடப்பட்ட பின்னர், முன்கூட்டிய தாக்குதல்களால் மிகப் பெரிய பாதிப்பை முறியடித்ததாக இஸ்ரேலிய இராணுவம் கூறுகிறது.

காசாவில் ஹமாஸ/க்கு எதிரான இஸ்ரேலின் போர் வெடித்ததற்கு இணையாக இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே தாக்குதல் தொடங்கியதில் இருந்து நேற்று முன்தினம் அது பாரிய அளவில் மாற்றம்பெற்றுள்ளது.

100 இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் தெற்கு லெபனானில் உள்ள 40 க்கும் மேற்பட்ட ஹிஸ்புல்லா ஏவுதளங்களை தாக்கியதுடன், ஆயிரக்கணக்கான லாஞ்சர் பீப்பாய்களை அழித்ததாக இஸ்ரேல் தரப்பு கூறுகிறது.

அவை முக்கியமாக வடக்கு இஸ்ரேலை இலக்காகக் கொண்டமைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இஸ்ரேலை நோக்கி ட்ரோன்கள் மற்றும் 320 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவியதுடன் 11 இராணுவ இலக்குகளை தாக்கியதாக ஹிஸ்புல்லா வெளிப்படுத்தியுள்ளது.

முன்கூட்டிய தாக்குதல்கள் தொடர்பில் இஸ்ரேல் அறிந்ததாக கூறும் கருத்தை ஹிஸ்புல்லா அமைப்பு நிராகரித்துள்ளது.









# சுனிதா வில்லியம்ஸ் - புட்ச் வில்மோர் பெப்ரவரியில் பூமிக்குத் திரும்புவார்கள்

## நாசா அறிவிப்பு

சுமார் 80 நாள்களாக சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள 2 நாசா விண்வெளி வீரர்கள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பூமிக்குத் திரும்புவார்கள் என நாசா அறிவித்துள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸும் மற்றொரு வீரரான புட்ச் வில்மோரும் கடந்த ஜூன் மாதம் 5 ஆம் திகதி ஸ்டார் லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றனர்.

அங்கு ஆய்வுகளை மேற்கொள்ளும் அவர்கள் ஆய்வுகளை நிறைவு செய்து 8 நாள்களில் பூமிக்குத் திரும்பத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும் அவர்களது விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இருவரும் பூமிக்குத் திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான க்ரு டிராகன் விண்கலம் மூலம் பூமிக்குத் திரும்புவார்கள் என நாசா தெரிவித்துள்ளது.



# வடக்கு - கிழக்குத் தமிழர்களின் வாக்குகளால்தான் இந்தத் தடவை ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்!

## வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய மட்டக்களப்பில் தெரிவிப்பு!

(பழுவூரான்)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளால்தான் இம்முறை ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார் என ஐக்கிய சோசலிஸ்ட் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

மட்டு ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட ஜனநாயகத்திற்கு எதிராக செயற்பட்டுள்ளார் என நீதிமன்றம் அண்மையில் தெரிவித்துள்ளது. இப்படியானவர்களையா நாம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கவுள்ளோம்?

பிரதான வேட்பாளர்கள் ஒரு வாக்காளருக்கு 300 ரூபாவுக்கு மேல் செலவளிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிடம் அனுமதி கோருகின்றனர். அப்படியினால் இவர்களுக்கு மில்லியன் கணக்கில் பணம் எங்கிருந்து வந்தது? மக்கள் மீது உள்ள அக்கறையிலா இவர்கள் இவ்வளவு பணத்தைச் செலவளிக்க ஆர்வமாக இருக்கின்றனர்?

நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற ரணிலின் கூட்டத்தில் பங்குபற்றியோருக்கு தலா ஆயிரம் ரூபா காசும் பிரியாணிச் சாப்பாடும்,. களவாகக் கால் போத்தல் சாராயமும் வழங்கியுள்ளனர்.

அநுரகுமாரவும் அப்படித்தான். இவர்கள் எல்லாம் மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் அல்லர் என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

தற்போது ரணிலின் கூட்டங்களில் நிற்பவர்கள் பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்களும், அலிசப்றி ரகீம் போன்ற தங்கம் கடத்தியவர்களுமே. .

தமிழர்களுக்கு எதிராக செயற்பட்ட ஜே.வி.பி. கட்சியினர் எவ்வாறு தமிழர்கள் மத்தியில் வாக்கு கேட்டு வருவது? சிந்தித்துப் பாருங்கள்.




தற்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகச் செயற்படும் ஒரு கட்சி எமது ஐக்கிய சோசலிச சட்சி மாத்திரமே. தமிழ் மக்கள் கோரும் நியாயமான கோரிக்கையைத் தீர்க்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

ரணில் எதிர்வரும் தை மாதம் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக கூறுகின்றார். அப்படியானால் அவரால் ஏன் அதை இப்போது செய்ய முடியவில்லை? அதை நாம் ஏமாற்று வித்தையாகவே பார்க்க வேண்டும்.

ஜே.வி.பி.யினர் தற்போது ஒவ்வொரு 3 கிலோ மீற்றருக்கும் ஒரு தேசிய பாடசாலை அமைக்கவுள்ளனர் எனக் கூறுகின்றனர். இதெல்லாம் எந்தளவிற்கு சாத்தியம்? அப்படியானால் அனைவரும் எமது மக்களை ஏமாற்றவே பார்க்கின்றனர்.

பாரம்பரிய தமிழ் முஸ்லிம் கட்சித் தலைவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்துத்து, தமது நலனுக்காகவே ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிக்கின்றனரே ஒழிய தமிழ் மக்களின் நலனுக்காக அல்ல. – என்றார்.



# சாரதி தூங்கியமையால் விபத்துக்குள்ளான கார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி மான்கேணி காட்டுப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதி தூங்கியமையால் கார் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சாரதி உட்பட காரில் பயணித்த அனைவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# கொழும்பு - கொம்பனி வீதி ஏரியில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கொழும்பு – கொம்பனி வீதியில் உள்ள ஏரியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று கொம்பனி வீதி பொலிஸார் தெரிவித்தனர்.

புஞ்சி பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கொம்பனி வீதி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.



# ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி திருகோணமலையில் துண்டுப்பிரசுரம் வழங்கல்



(ஹஸ்பர் ஏ.எச்.)

ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் துண்டுப் பிரசுரங்களை பொது மக்களுக்கு நேற்று வழங்கினர்.


திருகோணமலை பெரியகடை வீதியில் ஆரம்பித்து சிவன் கோயிலுக்கு முன்னால் வரையான வீதிகளில் அவர்கள் துண்டுப்பிரசுரங்களை வழங்கினர்.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர், மாவட்டச் செயலாளர் உட்பட கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டு மக்களுக்கு வீதி வழியாக துண்டுப்பிரசுரங்களை வழங்கி வைத்தார்கள்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட கட்சியின் மாவட்டச் செயலாளர் சிறீபிரசாந்த் –

தமிழ் மக்கள் இம்முறை ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும். பொது வேட்பாளர் என்பது வெறும் கண் துடைப்பு. இரண்டாம் விருப்பு வாக்கைப் பெரும்பான்மை இன வேட்பாளருக்குக் கொண்டு செல்லும் தந்திரோபாயம். ஒற்றையாட்சி முறை இல்லாமல் ஆக்கப்பட்டு சமஷ்டி ஆட்சியை கொண்டு வரும் வரை தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும். 13 ஆம் திருத்தத்துக்கு ஆதரவளித்தோரே பொது வேட்பாளருக்குப் பின்னால் நிற்கின்றனர். – என்றார்.





# அரியத்துக்கு வடக்கு - கிழக்கில் 6 லட்சம் வாக்குகள் கிடக்குமாம்

## அடித்துக் கூறுகின்றார் சிவசக்தி ஆனந்தன்

(கே.வசந்தன்)

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரான அரியநேத்திரனுக்கு வடக்குக் கிழக்கில் உள்ள 12 லட்சம் வாக்குகளில் ஐம்பது வீதமான வாக்குகள் கிடைக்கும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் உள்ள வாடி வீட்டில் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், வவுனியாவை சேர்ந்த சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் –

கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தென்னிலங்கையைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் காட்டிய அந்த நல்லிணக்க செய்தியை ஆட்சியில் இருந்த எந்த ஜனாதிபதிகளும் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வையோ அல்லது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வையோ இதுவரை முன்வைக்கவில்லை.

ஆகவே அந்த அடிப்படையிலே நாங்கள் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளோம். வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ்ப் பேசும் மக்கள் வடக்கு, கிழக்கிற்கு வெளியே இருக்க கூடிய மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கையாகும். இதற்கான தேர்தல் பிரச்சாரம் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருக்கின்றது.



வடக்கு கிழக்கிலே 12 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளார்கள். அதில் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கான பணிகளை நாங்கள் ஆரம்பித்து இருக்கின்றோம். நிச்சயமாக இந்த தேர்தலிலே தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு மற்றும் அரசியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதில் 50 வீதமான மக்கள் வாக்களிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

உண்மையில் நீண்ட காலமாக தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனப் பிரச்சினை ஒன்று இருக்கின்றது. இதுவரை காலமும் தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதிகள் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை தீர்க்கவில்லை என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் சொல்ல முனைகிறோம். இந்தப்பிரச்சினை தீர்க்கப்படும் வரைக்கும் தெற்கில் இருக்கின்ற எந்த ஒரு சிங்கள வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க மாட்டார்கள் என்ற செய்தியையும் கூறுகின்றோம்.

அடுத்து சர்வதேசம். இந்த யுத்தத்தை முடிக்கும் வரையும் பல நாடுகளும் உதவியை வழங்கி இந்த யுத்தத்தை முடித்து வைத்தன. யுத்தம் முடிந்த பிற்பாடு தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த சர்வதேச நாடுகள் உறுதியளித்திருந்தன.

யுத்தம் முடிந்து 15 ஆண்டு காலமாகி இருக்கின்றது. ஆனால் சர்வதேச நாடுகளும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. இலங்கை அரசாங்கமும் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆகவே தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனப் பிரச்சனை ஒன்று இருக்கின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை.

ஒரு புதிய அரசியல் மாற்றத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். –என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி, வர்த்தகப் பிரமுகர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



# வினோ எம்.பி. மீது நடவடிக்கை பாயும்

## ரெலோ மாவட்டப் பொறுப்பாளர் அறிவிப்பு

(கே.வசந்தன்)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோர்) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் விஜயகுமார் (புரூஸ்) தெரிவித்துள்ளார்.

வவுனியா, விருந்தினர் விடுதி ஒன்றில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் மாலை இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் கட்சிகளில் தமிழீழ விடுதலை இயக்கமும் ஒன்றாகும். ஆனால் அக் கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த பின்னர் ஜனாதிபதியை சந்தித்து பேசியுள்ளதுடன், அக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பொது வேட்பாளரை விமர்சித்து வருகிறார். இந்நிலையில் ரெலோவின் உண்மையான நிலைப்பாடு என்ன என கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ரெலோ சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகளிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட பொறுப்பாளர் வியகுமார் (புரூஸ்), வினோ எம்.பி. தற்போது கட்சியின் எந்தவொரு கட்டமைப்பிலும் இல்லை. அவர் எந்த பதவிகளிலும் இல்லை. அவர் ஒரு சாதாரண உறுப்பினர். அவர் தற்போது பலவிதமாக கதைக்கிறார். நாம் கட்சியாக தலைமையின் அனுமதியுடன் இந்த பொது வேட்பாளர் தொடர்பான கட்டமைப்பில் தொடர்ந்தும் பயணிப்போம் எனக் கூறுகின்றேன். இந்த தேர்தல் முடியும் முன் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படும். நாம் பொது வேட்பாளருக்கே ஆதரவு. – எனத் தெரிவித்தார்.



# பல நோய்கள் பரவுகின்ற அபாயம் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை

மழையுடனான காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பல நோய்கள் பரவும் அபாயம் உள்ள தாகச் சுகாதாரத் துறையினர் தெரி விக்கின்றனர்.

அதன்படி வாந்தி, வயிற்றுப்போ–க்கு, காய்ச்சல், எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக் கள் உரியச் சுகாதார நடைமுறை களைக் கடைப்பிடிப்பது அவசியமா கும் எனச் சுகாதார பிரிவினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

# இந்தியப் போர்க்கப்பல் இன்று கொழும்பு வருகை




இந்தியக் கடற்படையின் முன்னணி போர்க்கப்பலான ஐ.என்.எஸ். மும்பை இன்று இலங்கைக்கு வரவுள்ளது.

மூன்று நாள்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைவரும் இந்தக் கப்பலுக்குக் கொழும்பு துறைமுகத்தில் தமது சம்பிரதாய முறைப்படி வரவேற் பதற்கு இலங்கை கடற்படையினர் திட்டமிட்டுள்ளனர்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, மேற்படி கப்பல் 2001 ஆம் ஆண்டு இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.

ஐ.என்.எஸ். மும்பை கப்பல், இலங்கை விமானப்படையால் இயக்கப் படும் டோர்னியர் கடல் கண்காணிப்பு விமானத்திற்கான அத்தியாவசிய உதி ரிப்பாகங்களைக் கொண்டு வரவுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தென்பகுதி வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுக்கு அழைத்தால் அது தொடர்பில் கூடி முடிவெடுப்போம்

## ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிப் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தகவல்

(கே.வசந்தன்)

தென்பகுதி வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அது தொடர்பில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்றய் இடம்டபெற்றது. அதன்பின் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தமிழ்ப் பொது வேட்பாளரை வெல்ல வைப்பதற்கான நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விடயங்களை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்று பேசப்பட்டது. ஏற்கனவே வடக்கு - கிழக்கில் பிரசார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி தனது முழுமையான பங்களிப்பை வழங்கும்.

மாவட்ட ரீதியான முகவர்களை நியமிக்க வேண்டியுள்ளது. மாவட்ட ரீதியாக தேர்தல் அலுவலகங்களை திறக்க வேண்டியுள்ளது. அதனை எவ்வாறு மேற்கொள்வது எனப் பல விடயங்களை பேசியுள்ளோம். இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் சிவில் அமைப்புக்களுடன் கலந்துரையாடி பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

என்ன கொள்கைகளுக்காகப் பொதுவேட்பாளரை நிறுத்தினோமோ அந்தக் கொள்கைகளை வெற்றியடையச் செய்யும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். ஆரோக்கியமான கருத்துப் பகிர்வு இடம்பெற்றது. எமது முடிவுகள் தொடர்பாக சிவில் அமைப்புகளுடன் பேசி பொதுவான ஒரு முடிவை எடுத்து, அதனை முன்னெடுத்துச் செல்வோம்.

இதில் அங்கத்துவம் வகிக்கும் சில கட்சிகள் அவர்கள் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களை சந்தித்துள்ளார்கள். இதன்போது தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதையும், தென்பகுதி வேட்பாளரை நம்பி பல தடவைகள் வாக்களித்து இருக்கின்றோம் என்பதையும், ஆனாலும் எமது நம்பிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதையும் அவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதியாக வந்தால் என்ன செய்வோம் என அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவார்கள் எனக் கூறியுள்ளார்கள். எங்களது விடயங்களையும் பேசியவர்கள் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

நாம் ஒன்று சேர்ந்து பொதுவேட்பாளருக்கு தொடந்தும் வாக்கு சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். எதிர்காலத்தில் காத்திரமான பேச்சுவார்த்தைக்கு வேட்பாளர்கள் வருவார்களாக இருந்தால் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம். - எனத் தெரிவித்தார்.






# மூன்று லட்சத்து ஆறாயிரத்து 81 பேருக்கு வன்னி மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதி

**(கே.வசந்தன்)**

ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் மூன்று லட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

தேர்தல்தொடர்பாகவவுனியாமாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் மூன்று லட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 585 வாக்காளர்களும், முல்லைத் தீவில் 8. ஆயிரத்து 889 வாக்காளர்களும், மன்னார் 90 ஆயிரத்து 607 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், வன்னித் தேர்தல் தொகுதியில் 13,389 தபால் மூல வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன், 228 தபால் வாக்களர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தேர்தலில் வாக்களிப்பதற்காக மூன்று மாவட்டங்களிலும் 387 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாதாரண வாக்கு எண்ணும் பணிகளுக்காக வவுனியாவில் 12, முல்லைத்தீவில் 8, மன்னாரில் 7 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தபால் வாக்குகள் எண்ணுவதற்காக 10 நிலையங்களும் என மொத்தமாக 37 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.




## வலுவடைகிறது இலங்கை ரூபா

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபா 7.6 சதவீதத்தால் வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த குறிகாட்டிகள் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 296 ரூபாய் 55 சதவீதமாகவும், அதன் விற்பனை விலை 305 ஆகவும் கடந்த வெள்ளிக்கிழமை பதிவானது.



## இ.தொ.காவுடன் ஜனாதிபதி புரிந்துணர்வு உடன்படிக்கை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கன்னி தேர்தல் பிரசாரம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடந்த 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மூன்றாம் தவணைக்கான முதல் கட்டம் ஆரம்பம்

## பெற்றோருக்கு விசேட அறிவுறுத்தல்

அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக் கான பாடசாலையின் முதல் கட்டம் இன்று திங்கள் கிழமை ஆரம்பமாகும் எனக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள் ளது.

2024 ஆம் ஆண்டு அரச பாட சாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறை வடைந்திருந்தது.

இந்த நிலையில், மூன்றாம் தவ ணைக்கான முதல் கட்ட கல்விச் செயற் பாடுகள் இன்று முதல் முன்னெடுக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோ ருக்கு விசேட அறிவுறுத்தலொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பல நோய்கள் பரவும் அபாயம் உள்ளதா கச் சுகாதாரத் துறையினர் தெரிவிக் கின்றனர்.

அதன்படி வாந்தி, வயிற்றுப் போக்கு, காய்ச்சல், எலிக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுமுறைக் காலம் முடிந்து பிள்ளைகள் பாடசாலைக்குத் திரும்ப உள்ள நிலையில் உரியச் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும் எனச் சுகாதார பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடை யும் வரையில் தபால் ஊழியர்க ளின் விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட் டுள்ளன.

அத்தியாவசிய தேவைகளுக்கான விடுமுறைகளுக்கு மாகாண தபால் மா அதிபர்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ள முடியுமென தபால் திணைக் களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர் தலுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய முத்திரையிடப்பட்ட பொதிகள் இன்று தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன எனத் தேர் தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் நிறைவடைந் துள்ளன என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க கூறியுள்ளார்.

அச்சுப்பணிகள் நிறைவடைந்த நிலையில், தபால்மூல வாக்குச்சீட்டு களை மாவட்ட தெரிவத்தாட்சி அதி காரிகளுக்கு அனுப்புவதற்கு திட்டமி டப்பட்டுள்ளது.

தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் தமது வாக்குகளை தபால் மூலம் பதிவு செய்வதற்கான திகதி தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தேர்தல் திணைக் கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத் தர்கள் எதிர்வரும் செப்டம்பர் 4 ஆம் திகதி தபால்மூல வாக்குகளைப் பதிவு செய்ய தேர்தல்கள் திணைக்களத்தி னால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செப்டம்பர் 5, 6 ஆம் திகதிகளில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் ஏனைய திணைக்கள அரச உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த தினங்களில் வாக்களிக்கத் தவறும் அரச உத்தியோகத்தர்கள் எதிர் வரும் 11, 12 ஆம் திகதிகளில் தத்தமது மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்கு 712,321 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

# தலைவர் பிரபா எடுத்த தேர்தல் புறக்கணிப்பு முடிவையே நாங்கள் பேரம் பேசும் ஆயுதமாகப் பயன்படுத்துகிறோம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் எம்.பி. விளக்கம்




**(கனகராசா சரவணன்)**

விடுதலைப் புலிகள் 2009 பின்னர் ஏதோ ஒரு மூலையில் தக்க வைக்க ப்பட்டிருந்தால் இன்று ஒரு சமஷ்டி அரசமைப்புக் கொண்டுவரப்பட்டிருக்கும். துரதிர்ஷ்டவசமாக 2009 தலைவர் பதவிக்கு வந்த மறைந்த இரா.சம்பந்தன் இந்தியாவின் முகவராக செயற்பட்டார். அவரும் இந்த கொள்கைகளை வைத்து பேரம் பேச ஆரம்பித்திருந்தால் அன்று மாற்றங்கள் ஆரம்பித்திருக்கும்.

ஆனால் புலிகளை அழித்தால் அதற்கு பின்னர் தலைமைப் பதவிக்கு வரப் போகின்றவர்கள் இந்தியா, அமெரிக்காவின் முகவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தபடியால் தான் விடுதலைப் புலிகள் அழித்தொழிக்கப்பட்டனர் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேர்தலை புறக்கணிக்க வேண்டி அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அமைப்பாளர் த.சுரேஸ் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் துசாந்தன் தலைமையில் துண்டுபிரசுரம் விநியோகித்து ஆரம்பித்த பிரசாரத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சந்திரிக்கா ஓர் இனப்படுகொலையாளி. எங்களை அழிக்க ஒன்றாக நின்றார். இன்று அவருக்கு அரசியலில் இடமில்லை. அவர்கள் தங்களுடைய சுபபோகங்களை உறுதிப்படுத்திக் கொள்ள கட்சி சார்ந்து வேலைப்பாடுகளை வைத்து அவர்கள் அமைதியாக இருக்க கூடும். ஆனால் எங்களுடைய நிலைப்பாடு தொடர்ச்சியானது. 2005 தேசிய தலைவர் பிரபாகரன் இந்த தேர்தலை புறக்கணிப்பதன் மூலமாக தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அழுத்த கருவியாக இதை கையில் எடுத்திருந்தார்.

2002 சமாதான உடன்படிக்கையின் போது வடகிழக்கு 10 ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒரு இடைக் கால நிர்வாகம் தரப்பட வேண்டும் என ஒரு கோரிக்கை இருந்தது. குறிபாகத் தன்னாட்சி அதிகாரசபை 2003ாம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி முன் வைக்கப்பட்டிருந்தது. அந்த நிலமையில் இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டவேண்டும் என்ற அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்குமான ஓர் அழுத்தத்தை ஏற்படுத்தும் முகமாக அந்த தேர்தல் பகிஷ்கரிப்பு இடம்பெற்றிருந்தது.

ஆகவே இது நாங்கள் இன்று நேற்று எடுத்த முடிவு அல்ல. இது 2002 தேசிய தலைவர் எடுத்த முடிவு. இதுவுன் ஒரு ஜனநாயக ரீதியான அணுகுமுறை தான். இந்த ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என நாடாளுமன்றத்தில் இடைவிடாது எமது கட்சித் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமாரும் நானும் குரல் கொடுத்துவந்தோம்.

ஏன் என்றால் தேர்தல் நடந்தால் தான் நாங்களள் பேரம் பேச முடியும். இந்த தேர்தல் ஏதே ஒரு காரணத்துக்காக ஒவ்வொரு வருடத்துக்கு ஒருக்கால் வருமாக இருந்தால் அடிக்கடி பேரம் பேசுகின்ற வாய்ப்புக்கள் வரும். நாங்கள் ஜனநாயக்தையோ, தேர்தலையோ எதிர்க்கவில்லை. தேர்தலைப் பேரம் பேசுவதற்கான ஓர் ஆயுதமாக நாங்கள் பயன்படுத்துகின்றோம்.

எங்களைத் தவிர மற்ற எல்லோரும் அரசாங்கத்தின் நேரடி அல்லது மறைமுகமான பங்காளிகளாகச் செயற்படுகின்றவர்கள். ரணில் பதவி ஏற்ற பின்னர் வீழ்ந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியொழுப்புவதற்கு அவர் எல்லா கட்சிகளையும், எல்லா சமூகத்தையும் அரவணைத்து, இந்த நாட்டை முன்னுக்குக் கொண்டு வருபவர் என காட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் கூட்டணி, விக்கினேஸ்வரன், அவர் அழைக்கு முன்னரே நாய்க்குட்டிபோல ஓடிச் சென்று அவர் கொடுத்ததை சாப்பிட்டுவிட்டு, அவர் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என சொன்ன பின்னரும், போய் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள்.

நாமல் ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு எதுவும் தரமாட்டோம் என்று தெரிவித்தமை ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. 75 வருடங்களாக வந்து தமிழர்களுக்கு உரிமை கொடுக்க முற்பட்டோம் எனச் சொல்லி வந்துள்ளனர். அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எப்போதுமே இது ஒரு பௌத்தநாடு, சிங்கள நாடு, இதைப் பேணிப் பாதுகாப்போம் என்ற விடயம் நிச்சயம் இருந்து வந்துள்ளது.

ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனதிலும் இது சிங்கள நாடு, வடகிழக்கில் ஆயிரம் புத்த விகாரை அமைப்போம் என இருந்திருக்கின்றது.

சஜித் பிரேமதாஸாவும் அதே போல தான். அவர் புத்தசாசன அமைச்சராக இருந்தபோது நீராவியடி பிள்ளையார் கோவில் பகுதியில் இறந்த தேரரை எரித்தமை, யாழ் நாவற்குழியில் ரயில்வே பகுதியில் சட்டவிரோத விகாரை அமைத்தமை எல்லாம் நடந்தன. அநுரகுமார திஸநாயக்காவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. மிக மோசமான இனவெறி கொண்ட ஒருவர். இறுதிப் போரிலே தமிழர்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரை அழித்தொழிக்க, லட்சக் கணக்கான சிங்கள இளைஞர்களை திரட்டி இராணுவத்திக்கு கொடுத்த ஒரு கொலை வெறி பிடித்த ஒரு கூட்டத்தின் தலைவர்.

அது மட்டுமல்ல, வடக்குக் கிழக்கை வழக்குஒ போட்டு பிரித்த ஒரு மிக கொடூரமான இனவெறியர் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

எல்லோரது நிலைப்பாடும் அதுதான்.

தொடர்ச்சி▼

# தலைவர் பிரபா எடுத்த தேர்தல் புறக்கணிப்பு முடிவையே
# நாங்கள் பேரம் பேசும் ஆயுதமாகப் பயன்படுத்துகிறோம்!

தொடர்ச்சி▲

நாமல் ராஜபக்ஷவின் நிலைப்பாடு ஒன்றும் புதியதல்ல. இதற்காகத் தான் நாங்கள் சொல்லுகின்றேம், தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப் போகின்றீர்கள் என்று சொன்னால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதி சொந்த சிங்கள மக்களுக்கு சொல்லுங்கள். இந்தத் தோலிவியடைந்த ஒற்றை யாட்சியை ஒழித்து சமஷ்டி முறையைக் கொண்டுவரப் போகின்றோம் எனச் சொல்லுங்கள்.

அதற்கொல்லாம் அப்பால் நேற்று முளைத்த காளானாக இருக்கின்ற இந்த நாமல் ராஜபக்ஷ இந்த கருத்தைச் சொல்லக் கூடிய துணிச்சலை கொடுத்தமைக்கு எம்.ஏ.சுமந்திரன், இரா.சம்மந்தன், பா. அரியேந்திரன். சி.சிறீதரன் உட்பட இந்தத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலே 2010,2015,2020 ஆண்டுகளில் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பி



னர்கள்தான் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். விக்கினேஸ்வரனும் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்

ஏன் என்றால் ஐ.நா.மனித உரிமை பேரவைக்கு குற்றவியல் விசாரணையை நடத்துவதற்கு அதிகாரங்கள் இல்லை என்று நன்றாக தெரிந்த பிற்பாடும் தொடர்ச்சியாக உள்ளக விசாரணைக்குள் பொறுப்பு கூறலை முடக்கி, சர்வதேச விசாரணை வேண்டாம் எனச் சொல்லி, இனப்படுகொலையாளிகளைப் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் இவர்கள் எல்லோரும் கூட்டாகச் செயற்பட்டு வந்தவர்கள்.

2019 இல் கோட்டா பதவி ஏற்ற பிற்பாடு ஜனாதிபதியாக இருக்கின்ற போது, 2021 மாச் மாதம் இலங்கை தொடர்பாக ஒரு தீர்மானம் வந்த நிலையில் பொறுப்பு கூறல் விடயத்தை மனித உரிமை பேரவையில் இருந்து வெளியே எடுத்து, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றிக்குக் கொண்டுபோக வேண்டும் என்ற முயற்சியை எங்கள் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மிகத் தீவிரமாக முன்னெடுத்திருந்தபோது கூட ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என 2019 வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தலைவர்கள் கடிதம் எழுதினார்கள். இந்தக்கயவர்கள் இனப்படுகொலையாளிகளை பாதுகாக்கக் கொடுத்த ஆதரவுத் துணிச்சல்தான் இன்று நாமலுக்குக் இந்த திமிரை கொடுத்திருக்கினறது. - என்றார்.

# சைக்கிள் கட்சியினரைப் பிரசாரம் செய்ய விடாது அம்பாறை திருக்கோவிலில் பொலிஸார் அடாவடி

## தேர்தல் திணைக்களம, மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு





(கனகராசா சரவணன்)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் தேர்தல் புறக்கணிப்பு தொடர்பாகத் துண்டுபிரசுரம் விநியோகித்து பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியினரை பிரசாரம் செய்யவிடாது தடைவிதித்த பொலிஸாருக்கு எதிராக அம்பாறை தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்திலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை தாங்கள் முறைப்பாடு செய்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த. சுரேஷ், அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துசாந்தன் ஆகியேர் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் புறக்கணிப்பு தொடர்பாகத் துண்டுப் பிரசுரம் விநியோகித்து பிரசார நடவடிக்கையை பகல் 11 மணிக்கு திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து ஆரம்பித்தனர்.

வீதிகளில் பிரயாணித்தவர்கள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு சென்று வீதி வீதியாக துண்டுபிரசுரம் விநியோகித்தனர். இதன் போது அங்கு ஜீப்பில் வந்திறங்கிய திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸெ துண்டுபிரசுரம் விநியோகித்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் கொண்ட குழுவை மறித்து தேர்தல் சட்டத்துக்கு முரணாக செயற்படுகின்றனர் எனவும், தேர்தலை புறக்கணிக்க முடியாது மற்றும் இனப்பிரச்சினையை தூண்டுகிறார் எனவும் 12 பேருக்கு மேல் ஒன்று கூட முடியாது,சட்டநடவடிக்கை எடுப்பேன் என அச்சுறுத்தில் விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையே வாக்கு வாதங்கள் இடம்பெற்றன. அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அங்கிருந்து சுமார் ஒரு மணியளவில் வெளியேறி அம்பாறை தெரிவத்தாட்சி அலுவலகத்தை நோக்கிப் பிரயாணித்த வாகனத்தை பொலிஸார் பின் தொடர்ந்தனர்.

இதன் பிற்பாடு அம்பாறையில் தேர்தல் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துவிட்டு கல்முனை நோக்கி மாலையில் பிரயாணித்த நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தை 3 பொலிஸ் வாகனங்கள் பின் தொடர்ந்து வீடியோ எடுத்துள்ளனர்.

இவ்வாறு தொடர்ந்து பிரச்சார நடவடிக்கை செய்ய விடாது பொலிஸாரின் அடாவடிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.08.2024




உங்களையும் பிறரையும் மகிழ்விக்க சரியான அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிகள் அதிகம் இருக்கும் காரணத்தினால் அதிருப்தி நிலவும். உங்கள் மேலதிகாரிகளுடன் அனுசரிக்கும் போக்கில் பிரச்சினை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. நெருங்கிய உறவுகளிடம் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை பொறுத்தவரை இன்று முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். முயற்சிகள் எடுத்தாலும் அதிருப்தி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது வரவேற்கத்தக்கதல்ல.அதனை தவிர்ப்பது நல்லது.

நீங்கள்பணிகளைகவனமாகக்கையாள வேண்டும். பொறுமையை பராமரிக்க வேண்டும். இதனால் வெற்றி அடையலாம். உங்கள் சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்புள்ளது.

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும். அகந்தைப் போக்கை தவிர்க்கவும்.

நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதற்காக இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் காணப்படும். அனுசரணையான மன நிலை மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் பராமரிக்கலாம்.

இன்று நிதிநிலையில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். இதனால் வரவு செலவு இரண்டும் காணப்படும்.

இன்று அஜீரணக் கோளாறு பிரச்சினை காணப்படும். உணவில் கவனம் தேவை.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண தைரியமாகவும் உறுதியுடனும் செயல்பட வேண்டும்.

கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் நன்மை பெறலாம். என்றாலும் தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உறவு முறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளிடம் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். வயிற்று உப்பசம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும். இன்று சாதுர்யமாக செயல்பட வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உறவில் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது அமைதியாக இருத்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி எதிர்பார்க்கும் வகையில் இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் அதிக உழைப்பு காரணமாக உடல் வலி காணப்படும். ஓய்வெடுக்கவும் ஆன்மீக ஈடுபாட்டிற்கும் நேரம் ஒதுக்குங்கள்.




இன்று பல சௌகரியங்கள் காணப்படும். இன்று பயனுள்ள முடிவுகளை எடுக்கலாம்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியோடு பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

இன்று உங்களின் உறவுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் இன்றைய நாளை கொண்டாடி மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. என்றாலும் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




அனுசரணையான அணுகுமுறை மூலம் நீங்கள் இன்றைய நாளை மகிழ்ச்சிகரமாக ஆக்கலாம். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரியுடன் தகவல் தொடர்பில் இருக்கும் பிரச்சினை காரணமாக பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறிது அனுசரித்து செல்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

குடும்பத்தில் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். நெருங்கிய உறவுகளிடம் சண்டை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நீங்கள் நேர்மையான முயற்சி எடுப்பீர்கள். இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். என்றாலும் தேவையற்ற கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று பணிகள் அதிகமாக இருப்பதால் நேரத்தோடு பணியை முடிக்க வேண்டும்.

இன்று விரும்பத்தகாத தருணங்கள் ஏற்படலாம். இன்று உறவுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

இன்று மிதமான நிதி வளர்ச்சி காணப்படும். நிதி நிலைமையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையான அணுகுமுறை நல்லது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.08.2024




இன்று நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களின் நேர்மையான முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உறவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று திருப்தியும் முன்னேற்றமும் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும் நம்பிக்கையோடு அணுகுவது உங்களுக்கு நன்மை அளிக்கும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவு சிறப்பாக இல்லை.

குழந்தைகளின் வளர்ச்சி கவலை அளிக்கும். உறவில் அகந்தைப் போக்கை கைவிட வேண்டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பணத்தை இழக்க வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.




இன்று நீங்கள் உங்களை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வது நல்லது.

பணியில் இன்று வளர்ச்சி காணப் படாது. பணியில் கவனம் குறைவாக இருக்கும். பொறுமையுடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்ற வேண்டும்.

குடும்பத்தில் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நெருங்கிய உறவுகளுடன் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். அது தேவையற்ற செலவுகளாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.




இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் மற்றும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

இன்று உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அன்பு குறைந்து காணப்படும். இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பணத்தை சிறந்த வகையில் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park